அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்து தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டமாக அப்போது அது இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கதான், தமிழக முதலமைச்சர் அவர்கள், திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி ஆகிய இடங்களில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கிளைகளை உருவாக்கிக் கொடுத்தார்கள். ஆக, இந்த அறிக்கையிலே நான் சொல்லியிருக்கிறேன். உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று உண்மையிலேயே அங்கு தேவைப்படுமானால் படிப்படியாக உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்க இந்த அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

அடுக்குமாடிக் குடியிருப்பு

***10141—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடத்தூர் பேரூராட்சியில் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடத்தூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் இல்லை. எனவே, புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் வாய்ப்பு தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்கள் மண்ணின் மைந்தர் அண்ணன் திரு. கே.பி. அன்பழகன் அவர்களுக்கும், தங்களுக்கும் முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த எங்கள் ஆட்சிக் காலத்தில் எங்கள் மாவட்டத்தில் ஏறக்குறைய 235 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,890 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில், 168 குடியிருப்புகள் மற்ற சமுதாயத்தினருக்கு—பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும், மீதியிருக்கின்ற குடியிருப்புகள் ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கடத்தூர் பகுதியில் இருக்கின்ற அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகளே இல்லாதவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகக் கட்டப்படுகிற குடியிருப்புகள். அவர்கள் அதற்குண்டான தொகையைக் கட்டித்தான் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே, அங்கே* demand *எப்படி இருக்கிறதோ, மக்களிடம் கேட்பு*

[2022 ஏப்ரல் 13

எப்படியிருக்கிறதோ, அதைப் பொறுத்து அரசு நிலம் கிடைத்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்குமாடிக் குடியிருப்புகள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிறதா அல்லது மற்ற துறைகளின்மூலம் கட்டிக் கொடுக்கப்படுகிறதா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால், எங்கள் பகுதியில் ஏற்கெனவே குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. ஏனென்றால் மற்ற சமுதாயத்திற்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதுபோல், மற்ற துறைகள் மூலமாகவாவது கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்தில், அந்த வீடுகள் சிறிய வீடுகளாக இருக்கின்றன. அவை குடியிருப்பதற்கு ஏதுவாக இல்லை. எனவே, குறைந்தது 400, 500 சதுர அடி பரப்பளவிலான வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும். அதேசமயத்தில், தருமபுரி, பாலக்கோடு, அரூர் ஆகிய பகுதிகளிலும் குடியிருப்புகளைக் கட்டித்தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தைச் சார்ந்தவர்கள்தான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கேள்வியை உரிய வகையில் கேட்டால், அதற்குரிய பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

2022 ஏப்ரல் 13]

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியிலே வீட்டு வசதி வாரியத்திற்காக நிலம் எடுக்கப்பட்டுள்ளது. கடம்பத்தூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கு (*economically weaker sections*) வீடு என்பது ஒரு கனவாக இருக்கிறது. குறிப்பாக, வீட்டு வசதி வாரியம்மூலம் 1989–1991 மற்றும் 1996–2001 ஆம் ஆண்டுகளில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எவ்வாறு குடியிருப்புகள் கட்டப்பட்டனவோ, அதுபோன்று வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர இயலுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் கட்டுவதற்கு உரிய இடம் மற்றும் அங்கேயிருக்கிற மக்களிடத்திலே அதற்கான ஆதரவு மற்றும் கேட்பு இருக்குமேயானால், அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம். ஆனால், குறைந்த வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடிக் கட்டடமாகக் கட்டப்பட்டாலும் அல்லது வீடாகக் கட்டப்பட்டாலும், அதற்குண்டான தொகையை அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கும். எனவே, அந்த வகையில் அப்பகுதி மக்கள் தயாராக இருந்தால், அதற்கான ஏற்பாட்டை வீட்டு வசதி வாரியம் செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

சாலை அமைத்தல்

***3183—திரு. பொன். ஜெயசீலன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—